SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா

## சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2020-2021-ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

==============================================

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(வீகூ.ச-2)துறை

அரசாணை (ப) எண்.36 நாள்: 01.11.2021

பிலவ வருடம், ஐப்பசி- 15,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கடித ந.க.எண்.3595/2020/ஆ3(1), நாள் 25.10.2021.
2. அரசாணை (டி) எண்.148 , கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (CC.1) துறை, நாள் 01.11.2021

=======

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தில் பணிபுரியும் 67 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2020-2021-ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) ரூ.5,62,800/-ஐ வழங்குவது குறித்த கருத்துருவை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) வழங்குதல் குறித்து, மேலே

இரண்டில் படிக்கப்பட்டுள்ள அரசாணை அனைத்து தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கும் பொருந்துமாதலால், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2020-2021-ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) வழங்க அரசால் (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (CC.1)துறையால்) வெளியிடப்பட்ட ஆணையினை கடைபிடிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களுக்கு அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.47568/நிதித்(BPE)/2021, நாள்27.10.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹிதேஸ் குமார்எஸ்.மக்வானா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி),
சென்னை-7.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்,
சென்னை-7.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதித் (பொ.மா.க.) துறை, சென்னை-9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (CC.1)துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (அ.ந.மு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்